Cotton Blossom Case - Complaint Letter News

பெறுநர்:

மாண்புமிகு ; தமிழக முதலவர் அவர்கள்,

உயர்திரு ; தலைமைசெயலாளர் அவர்கள்,

உயர்திரு ; அரசு செயலாளர் அவர்கள், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை

உயர்திரு ;தொழிலாளர் ஆணையர் அவர்கள், சென்னை

உயர்திரு ; மாவட்ட ஆட்சியர் அவர்கள், திருப்பூர்

உயர்திரு ; தொழிலாளர் இணை ஆணையர் அவர்கள், கோவை

உயர்திரு ; தொழிலாளர் உதவி ஆணையர் அவர்கள் (சமரசம்) திருப்பூர்

உயர்திரு ; இணை இயக்குனர் அவர்கள், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம், திருப்பூர்

அய்யா,

பொருள்: காட்டன் பிளாசம் கம்பெனி நிர்வாகம் வேலைநீக்கம் செய்துள்ள 200 க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு பணிபாதுகாப்பு வழங்க கோருதல்,

189,டெக்கிக் நகர், முதலிபாளையம் திருப்பூர் என்ற முகவரியில் காட்டன் பிளாசம் (இந்தியா) பி லிட் என்ற நிறுவனம் பல வருடங்களாக இயங்கி வருகிறது. இத்தொழிற்சாலையில் 1000 க்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். கொரோனா நோய் தொற்று பரவல் காரணமாக கடந்த மார்ச் மாதம் முதல் கம்பெனி மூடப்பட்டதால் எங்களுக்கு வேலை அளிக்கப்படவில்லை. இக்காலத்திற்கு எவ்வித சம்பளமும் வழங்கப் படவில்லை. இந்நிலையில் அரசு உத்தரவின் படி தற்போது தொழிற்சாலை திறக்கப்பட்டு 18.5.2020ம் தேதி முதல் 50% சதவீத தொழிலாளர்களுடன் செயல்பட்டு வருகிறது.

தற்போது 300க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுடன் வேலைசெய்து வரும் நிலையில் நிர்வாகம் வேண்டுமென்றே 200க்கும் மேற்பட்ட தொழிலாளர்களுக்கு வேலைதர மறுத்து மிரட்டி வேலை நீக்கம் செய்து வருகிறது.

தொழிற்சாலை திறக்கப்பட்டு இரண்டு வாரத்திற்கு மேலாகியும் வேலை வழங்கப்படாததால் இவர்கள் வாழவழியின்றி குடும்பத்துடன் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர். ஏற்கனவே இரண்டு மாதத்திற்கு மேலாக சம்பளம் கொடுக்கவில்லை.தற்போது இரண்டு வாரத்திற்கு மேலாக வேலை தரமால் இருப்பதால் இத்தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே தாங்கள் இவர்களுக்கு வேலையும், தரவேண்டிய சம்பளத்தையும் பெற்றுத்தர உடனே நடவடிக்கை எடுக்குமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் திருப்பூர் மாவட்டத்தில் செயல்படும் பல பனியன் நிறுவனங்கள் இது போன்று தொழிலாளர்களை சட்டவிரோதமாக வேலை நீக்கம் செய்து வருகின்றன. இதனால் ஆயிரக்கணக்காண தொழிலாளர்கள் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. எனவே தாங்கள் உடனே நடவடிக்கை எடுத்து தொழிலாளர்களுக்கு பணி பாதுகாப்பு அளித்திட வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு

பொதுசெயலாளர்

(ஜி.சம்பத்)

திருப்பூர்

6.6.2020